# தி.மு.க. மீது கல்லெறியாதீர்! தங்கள் கைகளுக்குக் கட்டுப்போட வேண்டிவரும்!

இன்னும் இரண்டு ஆண்டுகளில் தி.மு.க.வினர் அரசியலை விட்டு விலகிவிடும் நிலை உருவாகும் என்றும், அண்ணா அறிவாலயத்தை வெள்ளை அடித்து வாடகைக்கு விடும் காலம் வரும் என்றும் அரசியல் விலைமாது இருமல்குமார்கள் ஆருடம் கூறிப் பேசியுள்ளார்கள்.

இனிமேல் தி.மு.க. தலைமையகமான அண்ணா அறிவாலயத்தை வெள்ளையடித்து வாடகைக்குத் தான் விட வேண்டும்; அங்கே முரசொலி அறக்கட்டளைக்குத் தான் சொத்துக்கள் அனைத்தும் உள்ளன. எனவே, அதைக் கைப்பற்றுவதற்குத் தான் போட்டி நடக்கிறது. அறக்கட்டளையை கைப்பற்றி விட்டு அறிவாலயத்தை வாடகைக்கு விட்டு, விட்டு வேறு வேலை பார்க்கச் சென்று விடுவர் என்று வீடு, மனை, கட்டடப் புரோக்கராக மாறி நிர்மல் குமார் சங்கிகளின் சாட்சியாகப் பேசியிருக்கிறார். இப்படியெல்லாம் இடைத்தரகர் வேலை செய்து வரும் பா.ஜ.க.வின் கைக்கூலி சங்கி அமைச்சர் நிர்மல் குமார் உளறி இருக்கிறார்.

*இலட்சக்கணக்கான தொண்டர்களின் நாடி, நரம்புகள், எலும்புகள், சதைச் சுவர் எழுச்சியால், செந்நீர் சிந்திய குருதி ஓட்டத்தால்; இரத்தச் சகதியில் குழைத்துக் குழைத்து கலைஞரின் எண்ணத்தால், உழைப்பால் கட்டப்பட்டதுதானடா..... பேரறிஞர் அண்ணா பெயரிலான உயிரோவியம் அண்ணா அறிவாலயம்!சமூக நீதிக்காக தனது தள்ளாத மூப்பு கொண்டு 95 வயதிலும், மூத்திரச் சட்டியைத் தூக்கிக் கொண்டு சவலைப் பிள்ளையான தமிழர்களைக் காப்பாற்ற தனது கோடிக்கணக்கான சொத்துக்களை, வருமானங்களைத் துறந்து; பரப்புரை செய்தும், பட்டி, தொட்டிகள் எல்லாம் பஞ்சைகளாய், பராரிகளாய்ப் படுத்துக் கிடந்தவர்களைத் தனது சுயமரியாதைக் கைத்தடியால் தட்டி எழுப்பிய குரலுக்குச் சொந்தக்காரரும்; நாத்திக எழுச்சியை உருவாக்கியும்; ஆரியத்தை எரித்துத் திராவிடத்தை எழுப்பியும், பகுத்தறிவு வெளிச்சத்தைப் பரப்பியவருமான ஈரோட்டுப் பகலவன் தந்தை பெரியாரைப் பேசும் முகவரி தானடா..... இந்த அண்ணா அறிவாலயம்!

அரசியலில் அரண்மனைக் கோமகன்களிடம் அடைப்பட்டுக் கிடந்த அரசியலை, ஏழை, எளிய அன்றாடங் காய்ச்சிகளான ஆலமரத் தடிவாசிகளுக்கும் கொண்டு வந்து சேர்த்த தென்னாட்டுக் காந்தி இந்நாட்டு இங்கர்சால், தமிழ்நாட்டு பெர்னாட்ஷா காஞ்சிமண் கரு உமிழ்ந்த தமிழ்த்தாயின் தவப்புதல்வன் பேரறிஞர் அண்ணாவைப் பேசும் பைந்தமிழராம் பாமரர்களின் சொர்க்கவாசல் தானடா..... இந்த அண்ணா அறிவாலயம்! பட்டி, தொட்டிகள் எல்லாம் தனது கால் ரேகைகள் பதிக்காத இடமில்லை; கைப்படாத இரு வண்ணக் கொடிக் கம்பங்கள் இல்லை; தன் மூச்சுப்படாத முகவரியில்லை; நடக்காத தமிழர் வீட்டு நிகழ்ச்சிகள் ஏதுமில்லை; சுற்றிச் சுற்றிச் சுழன்றுத் தொண்டனின் ஒரு பைசா, ஓர் உரூபாய் என அவன் தரும் தொகை தேடி, மகரந்த மலர்களின் மதுத் தேன் நாடும் தேனீயைப் போலவும்; எண்ணி, எண்ணி நுகர்ந்து உணவைக் கால்கள் தேயத் தேயத் தேடும் சிறு எறும்பை போலவும்; அலைந்து, அலைந்து கொண்டு வந்து சேர்த்துக் கட்டி அழகு பார்த்து நிற்கும்; சாமானியர்களின் இதயங்களில் வீற்றிருக்கும் சரித்திரம் படைத்த கலைஞரால் எழுப்பிய பொன் மாளிகைதானடா..... இந்த அண்ணா அறிவாலயம்!

ஆனால், சில கோமாளிகள் அடங்கிய தற்குறிக் கூட்டத்தில் ஒருவனான ஈனப்பயல் 'இருமல் குமார் போன்றவர்கள் அடிக்கடி தி.மு.க. மீது வசைச் சொற்களை வீசிக் கொண்டிருக்கிறான்கள். அரசியலில் தி.மு.க. என்பது ஓர் இமயம். அந்த இமயத்தின் மீது மல ஈக்கள் சில மொய்க்க நினைப்பதால், அது இடம் பெயர்ந்து விழுந்து விடாது. பா.ஜ.க.வின் பக்கம் தி.மு.க. சென்று விட்டதால் அதன் முழுக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது என்று, பா.ஜ.க.வில் இருந்து வந்த ஆர்.எஸ்.எஸ்.ஸின் கைக்கூலி கோமாளிதான் இந்த நிர்மல் குமார். இன்றைக்கு த.வெ.க.வில் ஐக்கியம் ஆகியுள்ள பா.ஜ.க.வின் கங்காணிதான் நினைவு இழந்து தி.மு.க.வைச் சாடி உள்ளார்.

அண்ணா அறிவாலயம் ஒரு மாபெரும் மக்களுக்கான அரசியல் பாசறை! இங்கே பல அரசியல் வரலாறுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இங்கே தி.மு.க. தலைவர் கலைஞர், அதன் பின்வந்த மு.க. ஸ்டாலின் ஆகியோர் தலைமையில் தீர்மானிக்கப்பட்ட பல அரசியல் முடிவுகளால்தான் இந்திய அரசியலமைப்புச் சட்டம் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. சங்கிகளுக்குச் சவக்குழி வெட்டப்பட்டிருக்கிறது. ஜனநாயக இந்தியாவில் பல குடியரசுத் தலைவர்கள், பிரதமர்கள் உருவாக்கப்படப் பல தீர்மானங்கள் வடிக்கப்பட்டு இருக்கின்றன. இந்தியாவில் உள்ள பல்வேறு அரசியல் இயக்க தலைவர்கள் ஏன்; அயலகத் தலைவர்கள் வந்து சென்ற பயிற்சிப் பாசறைக்கான பட்டறை இடம்தான் அண்ணா அறிவாலயம்! இதைப் பற்றியெல்லாம் தெரியாமல் அடிக்கடி நினைவிழந்து பேசும் நிர்மல் குமார்கள், போதை உண்ட போக்கிரிகள் போல் உளறிக்கொட்டி ஊர் சுற்றும் பொதி சுமக்கும் விலங்காக மாறி வருகிறார்கள்.

எத்தனையோ அரசியல் புயலில் அசைந்து கொடுக்காத ஓர் ஆலமரந்தான் தி.மு.க.! இது மழைக்காலத்தில் பூத்த காளான் அல்ல; அழிந்து கருகிப்போவதற்கு! இதனிடம் எத்தனையோ பறவைகள் பழம் தின்று பசியாறவும், வன விலங்குகள் படுத்துறங்கி இளைப்பாறி நிழல் தேடவும் வரலாம்; போகலாம். ஆனால் நின்ற இடத்தில், ஆண்டாண்டுகாலம் விழுதுகள் இறங்கி வாழும் ஆலமரம் எனும் இயக்கமே தி.மு.க.!

இந்தக் கட்சி தேர்தலுக்காகத் தொடங்கப்பட்ட இயக்கம் அல்ல; ஆயிர ஆயிரம் ஆண்டு காலமாக அடக்கி, ஒடுக்கி, ஒதுக்கி வைக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக சமூகநீதி காக்கப் போராடி வரும் இயக்கமே தி.மு.க! இந்தக் கட்சி வெறும் தேர்தலுக்காக ஆதாயப் பதவி பெறுவதற்காகத் தொடங்கபட்டதல்ல! இமயமான இதனை எந்தக் கொம்பனாலும் அழிக்க முடியாது! இந்த மாபெரும் இயக்கத்தைப் பற்றிப், பதவிப் பிழைப்புத் தேடி அலையும் மோசடி நபர் அரசியல் வழிபோக்கன் நிருமல்குமார்கள் போன்றோர் பேசுவது மிக, மிக வேடிக்கையானது; விந்தையானதும் கூட!

அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க.வின் தலைமைக் கழக அலுவலகம், திருமணம் மற்றும் கூட்ட நிகழ்ச்சிகள் நடத்தும் 'கலைஞர் அரங்கம்', 'வெற்றிச் செல்வி அன்பழகன் இலவசக் கண் மருத்துவமனை', 'பேராசிரியர் க. அன்பழகன் ஆய்வு நூலகம்', 'கலைஞர் கருவூலம்' என இயங்கி வருகின்றன. 'கலைஞர் தொலைக்காட்சி' நிருவாகம் தரும் வாடகைப் பெறப்படுகிறது. இதற்கான வரவு – செலவுக் கணக்குகள் சட்டரீதியாகச் செயல்பட்டு வருகின்றன. 1971இல் தொடங்கப்பட்ட அண்ணா அறக்கட்டளை தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் போன்றோர் அறங்காவலர்களாக இருந்து அறக்கட்டளை இயங்கி வருகிறது. ஏழ்மை நிலையில் உள்ள தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான கல்வி, மருத்துவம் மற்றும் பொருளாதார உதவிகள் மாதம் மாதம் அறக்கட்டைளை மூலம் உதவி செய்து வருகிறது. மறைந்த தலைவர் கலைஞரின் சொந்த வருமானத்தில் சில கோடிகளை அண்ணா அறக்கட்டளைக்கு தானம் வழங்கியுள்ளார்.

சொத்துக்களை தனிநபர்கள் எவரும் உரிமை கொண்டாட முடியாது. அண்ணா அறிவாலயம் என்பது அறக்கட்டளையால் நிருவாகம் செய்யப்படுகிறது. பல கட்சிகளில் சென்று கபட நாடகம் ஆடி விட்டு, தற்போது, சங்கிகள் மூலம் ஊதுகுழலாகி த.வெ.க.வில் ஐக்கியமாகியுள்ள தறுதலை நிர்மல் குமார்கள் கூறுவது போல; எந்தத் தனிநபரும் உரிமை ஏதும் கொண்டாட முடியாததும், முற்றிலும் சட்டரீதியானதுமானதுதான் "அண்ணா அறிவாலயம்! இது தி.மு.க. அறக்கட்டளை (DMK Charitable Trust) – இன் கீழ்ச் சட்ட அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட ஒரு தனியார், தன்னாட்சி பெற்ற அமைப்பிற்குச் சொந்தமான சொத்தாகும்.

"கடந்த ஆட்சியில் இலஞ்சம் இல்லாமல் ஒரு சான்றிதழ் வாங்க முடிந்ததா? பிறப்பு முதல் இறப்பு வரை அரசு அலுவலகங்களில் பணம் இல்லாமல் ஒரு கையெழுத்து பெற முடிந்ததா? இன்று அந்த சூழ்நிலை இல்லை என்று யோக்கிய சிகாமணி நிர்மல் குமார் மதுரை திருப்பரங்குன்றத்தில் பேசியிருக்கிறார். இவருடைய சட்டத் துறையில்தான் அரசு வழக்கறிஞர்கள் நியமனத்தில் ஊழல் முறைகேடுகள் நடந்துள்ளன என்றும், அமைச்சர் தலையீட்டில் ரூ. 30 இலட்சத்துக்கு மேல் இலஞ்சம் கேட்கிறார்கள் என்றும் கூறி, எம். ஞானசௌந்தரி என்ற த.வெ.க.வைச் சேர்ந்த ஒரு பெண் வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குப் போட்டு இருக்கிறார். அவரைக் கட்சியிலிருந்து நீக்கினார்களே ஒழிய, அவர்கள் நடத்திய இலஞ்ச வேட்டையைப் பற்றி இது வரை வாய் திறக்கவில்லை.

அதைப்போல தென்தமிழகப் பகுதியில் த.வெ.க.வைச் சேர்ந்த ஒருவர் அதற்காக வசூல் வேட்டையையும் நடத்தி இருக்கிறார். உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் இராஜாராமன் என்பவர் அரசு வழக்கறிஞர் நியமனத்தில் இலஞ்சம் வாங்கியதற்கான ஆதாரங்கள் உள்ளன. நான் உயர்நீதிமன்றத்தில் வழக்குப் போட்டு நிரூபிப்பேன் என்று சொல்லி இருக்கிறார். இதைப் பற்றிப் பலமுறை எழுதியும், சொல்லியும், இந்த ஊழல், முறைகேடுகள் பற்றி முதலில் பதில் தர முன் வரவில்லை இருமல் குமார்.

சான்றிதழ் பற்றி வீரவசனம் பேசும் நிர்மல் குமார்; அவர் சட்டத்திற்கான எல்.எல்.பி. பட்டம் பெற்றவர் எனக் கூறித் தேர்தல் ஆணைய வேட்பு மனுவில் கூறியுள்ளார். அவர் பெற்ற எல்.எல்.பி. சட்டக் கல்விச் சான்றிதழ் முதலில் உண்மையானது தானா? எல்.எல்.பி. சட்டப்படிப்பு முழு நேரக் கல்வி படித்தாரா? அந்தச் சான்றிதழ் உண்மையானதுதானா? இலண்டன், வளைகுடா போன்ற வெளிநாடுகளில் வேலை செய்து கொண்டே, எப்படி இவர் இந்தியாவில் பெங்களூரில் எல்.எல்.பி. சட்டப் படிப்பு படித்திருக்க முடியும்? என்று பலரும் பொதுவெளியிலும், சமூக வலைதளங்களிலும் கேள்வி எழுப்பி வருகிறார்கள்.



கவிஞர் **தமிழ்தாசன்**
தி.மு.க. தீர்மானக்குழுத் தலைவர்

இது பற்றி நாம் ஏற்கெனவே எழுதிக் கேள்வி எழுப்பியுள்ளோம். உங்களுடைய சட்டப் படிப்பிற்கான கல்விச் சான்றிதழ் உண்மையா? இல்லையா? அதனை ஆதாரங்களோடு பொதுவெளியில் நிரூபிக்க வேண்டும் என்று எழுதி ஊடகங்களில் சொல்லி இருக்கிறோமே; இதுவரை அதை நிரூபிக்க பொதுவெளியில் வராத நிர்மல் குமார் தி.மு.க.வையும், கட்சித் தலைவர்களையும் வம்பு இழுத்திருக்கிறார்.

அண்ணா அறிவாலயத்திற்குச் சிக்கல்களைத் தொடர்ந்து அரசியல் கட்சிகள் சில அவ்வப்போது உருவாக்கி வந்த வரலாறு உண்டு. தி.மு.க.வில் 1978 முதல் 1996 வரை தொடர்ந்து 18 ஆண்டுகள் மாநிலங்களவை உறுப்பினராக இருந்தவர் கோபால்சாமி. அந்த வை. கோபால்சாமிதான் பின்னாளில் வைகோ ஆனார். அவர் கழகத்திற்கு எதிராக துரோகம் செய்து பிரபாகரனை பார்ப்பதாக கூறித் தலைமைக்குத் தெரியப்படுத்தாமல் இலங்கைப் பயணம் செய்தது; பொதுவெளியில் பேசக் கூடாத வார்த்தைகளைக் கழகத்தைப் புழுதி வாரித் தூற்றிப் பேசியது; கழகத்திற்கு எதிராகப் பிளவு ஏற்படுத்த எண்ணி உள்ளடி வேலை செய்தது என்பன போன்ற இராஜ துரோகக் காரணங்களால் கலைஞர் தலைமையிலான கழகம் அவரிடம் கேள்விகள் சில எழுப்பியிருந்தது. மேலும், கலைஞரின் உயிருக்குப் பாதுகாப்பற்ற சூழ்நிலையை உருவாக்கி வருகிறார் வை. கோபால்சாமி என்று அன்றைய முதலமைச்சராக இருந்த அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா அவர்களால் கலைஞருக்குப் பாதுகாப்பு வழங்கியும், ஒன்றிய அரசு உள்துறை அனுப்பிய கடிதத்தையே கலைஞருக்கு அனுப்பி வைத்தும் எச்சரிக்கை செய்திருந்தார்.

இந்நிலையில்தான் 1993 ஆம் ஆண்டு தி.மு.க. விலிருந்து வெளியேறுவதற்கான காரணங்களைத் தோற்றுவித்துக் கொண்டே இருந்த வை. கோபால்சாமி எனும் வைகோ கழகத்தை விட்டுப் பிரிந்தார். அவரின் ஆதரவாளர்களைத் திரட்டி ம.தி.மு.க. என கட்சியை உருவாக்கினார். இது கழகத் தொண்டர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. அப்போது வீர வசனம் பேசிய வை. கோபால்சாமி "அண்ணா அறிவாலயம் என்பது தொண்டர்களின் வியர்வையிலும், உழைப்பிலும் உருவானது. அது தனி நபர் குடும்பச் சொத்து அல்ல; உண்மையான திராவிட இயக்கத் தொண்டர்கள் எங்களுடன் இருப்பதால், அண்ணா அறிவாலயத்தைக் கைப்பற்றுவோம் என்று வளர்த்த கடா மார்பில் பாய்வது போல் வெறி பிடித்துக் கத்தினார்.

ஆனால், எந்த வை. கோபால்சாமி "அண்ணா அறிவாலயத்தைக் கைப்பற்றுவோம் என்று கூறினாரோ, அந்தக் வைகோ தி.மு.க.விடம் கூட்டணி உடன்பாடு கண்டு, நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் பெற்றார். அதைப் போல அவரும் மாநிலங்களவை உறுப்பினர், அவரது மகன் நாடாளுமன்ற உறுப்பினர் எனப் பல்வேறு பதவிகள் பெற்றுப் பூவோடும், பொட்டோடும் மஞ்சள் குங்குமத்தோடும் அல்லவா அரசியல் மண வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள்? அவர்கள் கடந்த காலத்தில் நால்வர் கூட்டணி அமைத்து காணாமல் போன அரசியலில் தி.மு.க.வால் மீண்டும் விலாசம் பெற்றுச் சொர்க்கபுரியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அறியாமலேயே நேரில் வந்து, அன்று இருந்த தி.மு.க. தலைவர் கலைஞரைப் பார்த்ததும், தற்போது மு.க ஸ்டாலினைப் பார்த்தும் தந்தையும், மகனும் வாழ்த்து கூறி பொன்னாடை போர்த்தியதும் சரித்திரம் பதிவுச் செய்து வைத்துள்ளதை எவரும் மறந்துவிட முடியாது.

அது மட்டுமல்ல; 2024 இல் பா.ஜ.க. தலைவராக இருந்த கே. அண்ணாமலை, சென்னை அண்ணாப் பல்கலைக்கழக மாணவி ஒருவரின் பாலியல் தொல்லைக்கு ஆளாக்கப்பட்ட அத்துமீறல்கள் கண்டித்து நீதி கேட்டு போராட்டம் நடத்துகிறேன் என்று கூறித் "தமிழ்நாடு அரசின் காவல்துறை நிர்வாகச் சீர்கேட்டை கண்டிக்கிறேன் என்ற பெயரில், நடுவீதியில் மேடையில் நின்று கொண்டு சாட்டையால் தன்னைத்தானே ஆறு முறை அடித்துக் கொண்ட நாடகம் நடந்தது. அது மட்டுமல்ல; 'தி.மு.க. ஆட்சியை தமிழகத்தில் இருந்து அகற்றும் வரை நான் செருப்பு அணிய மாட்டேன்' என்று தனது காலணிகளை கழற்றி சபதம் போட்டு வாய்ச்சவுடால் சட்டம் பேசினார். ஆயினும், கொஞ்ச நாள்களிலே என்ன நடந்தது?

அவர் சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோற்றவுடன், ஏப்ரல் 2025 ல் தமிழக பா.ஜ.க.வின் புதிய தலைவராக நைனார் நாகேந்திரன் பொறுப்பேற்றார். அவரது அன்புக் கட்டளை (?) யை ஏற்று அண்ணாமலை மீண்டும் செருப்பு அணிந்த நாடகம் நன்றாகவே நடந்தது என்பது குறிப்பிடத் தகுந்தது.

அந்த கே. அண்ணாமலை பா.ஜ.க. தமிழ் மாநிலத் தலைவராக இருந்த போது, "தி.மு.க.வின் ஊழல்களையும் மக்கள் விரோத கொள்கைகளையும் வேரோடு ஒழிப்பேன்; தி.மு.க.வின் அதிகார மையமாகத் திகழும் அண்ணா அறிவாலயத்தின் ஒவ்வொரு செங்கலையும் உருவும் வரை நான் ஓயமாட்டேன் என்று வானம் இடிமுழங்க ஓங்காரமிட்டுப் பேசினார். அப்படிப் பேசிய புண்ணியவான் உத்தமபுத்திரர் அண்ணாமலை கதி என்ன ஆனது? பாஜகவின் செல்லாக் காசாகி, தூக்கி எறியப்பட்டார். தானே பா.ஜ.க கட்சியில் இருந்து விலகுவதாகக் கூறிக் கழைக்கூத்து நாடகம் நடத்தி, இப்போது தனிக் கட்சி ஒன்றைத் தொடங்கி நடத்தி வருகிறார். அந்த அரசியல் இயக்கத்தின் பெயர் (We The Leaders) "நாங்கள் தலைவர்கள் என்பதாகும். புத்தனுக்கு ஞானோதயம் ஆலமரத்தடியில் பிறந்தது போல, அண்ணாமலைக்கு மோடி, அமித்ஷாக்களிடம் ஞானம் பிறந்து, "அரசியல் தலைவருக்கான பயிற்சி மற்றும் வழிகாட்டுதலை வழங்குவதற்காக ஏ.பி.ஜே. அப்துல் கலாம் நெறிமுறைகள் மற்றும் அரசியல் மையம் என்ற அமைப்பையும் அவர் உருவாக்கி உள்ளதாக செய்திகள் வந்துள்ளன.

தமிழ்நாட்டில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சி 2011 இல் வந்ததும், வராததுமாக நள்ளிரவில் கலைஞர் கைது, தி.மு.க. முன்னணி தலைவர்களுக்கு எதிராக நில மோசடி வழக்குகள், என உண்மைக்கு மாறான பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்திக் கைது செய்யப்பட்டனர். சென்னையில் மாநகராட்சி மேயராக சைதை துரைசாமி என்பவர் பொறுப்பேற்று இருந்தார். அவர் தொடக்க காலத்தில் ஈரோடு, கோபிசெட்டிப்பாளையம், மொடச்சூர் கிராமப் பகுதியில் இருந்து வந்து சென்னையில் பொரி–கடலை வியாபாரியிடத்தில் பொட்டலம் மடிக்கும் பையனாக வேலைக்குச் சேர்ந்து பணியாற்றி வந்ததாக ஏடுகள் எழுதி செய்திகள் வெளியிட்டன. அவர் இன்று மாட மாளிகைகளுக்குச் சொந்தக்காரராகப் பல கோடிச் சொத்துக்களுக்கு அதிபதியாக விளங்கிக் கொண்டிருக்கிறார். அவர் மற்றும் அவர் மகன் வீடு, அலுவலகங்களில் ஒன்றிய அரசின் சோதனைகள் நடைபெற்றன.

அவ்வாறான தூய அரசியலுக்குச் சொந்தக்காரரான அவர்; சென்னை மாநகர் மேயராக இருந்தபோது, "அண்ணா சாலையில் உள்ள அண்ணா அறிவாலயம் கட்டடப் பயன்பாட்டில் முறைகேடுகள் நடந்துள்ளன என உண்மைக்கு மாறான பொய்ச் செய்திகளை கூறிச் சட்டரீதியான நெருக்கடிகள் அவரால் கொடுக்கப்பட்டன. அண்ணா அறிவாலயம், சென்னை மாநகராட்சியின் பொதுப் பயன்பாட்டுகள் (OSR – Open Space Reservation) நிலவிதிகளுக்குப் புறம்பாகக் கட்டப்பட்டுள்ளது என்றும், அங்குள்ள வணிகவளாகக் கட்டடம், கலைஞர் அரங்கம் விதிமீறலில் உள்ளன என்றும் கூறி, அதற்குச் சீல் வைக்க அல்லது மாநகராட்சி வசம் எடுக்க சட்டரீதியான நோட்டீசுகளை மற்றும் ஆய்வுகளை முடுக்கி விட்டார் சைதை துரைசாமி. ஆனால், கலைஞரின் அறிவுரைகளினால், தி.மு.க. சார்பில் இந்த விவகாரத்தை எதிர்த்து, நீதிமன்றத்தைக் கழகம் நாடியது. தேவையான அனைத்து நில ஆவணங்களும், உரிய அனுமதிகளும் முறையாகப் பெறப்பட்டுள்ளன என்பதைக் குறித்து நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டது.

ஜெயலலிதா பின்னணியில் சைதை துரைசாமிகள் வீசிய துருப்பிடித்த குற்றச்சாட்டு அம்புகள் அனைத்தும் கழக இமயமலையின் மீது மோதிச் சுக்கு நூறாக உடைந்து விழுந்தன. போதிய சட்டப்பூர்வ ஆதாரங்கள் இல்லாததால், நீதிமன்றம் மாநகராட்சி நடவடிக்கைகளுக்குத் தடை விதித்தது. இதன் மூலம் அண்ணா அறிவாலயத்திற்குச் சட்டச் சிக்கல் ஏற்படுத்த முயன்ற அ.தி.மு.க.வின் சர்வாதிகார முயற்சிகள் அனைத்தும் முழுத் தோல்வியில் முடிந்தன. தி.மு.க. என்பது ஒரு வெடி மருந்துக் கிடங்கு. அதில் தேவையற்ற முறையில் எதிரிகள் தீக்குச்சிகள் உரசிப் போடும் விளையாட்டால், எவன் காரணக் கர்த்தாவாக இருக்கிறானோ, அவனே அதில் அழிந்து போனதாகத்தான் வரலாறு கூறுகிறது.

தி.மு.க. எனும் கோட்டை மீது கல்லெறிபவன் தன் கைகள் காயபடுத்திக்கொண்டு கட்டுப்போட்டுதான் அலைய வேண்டும் என்பதை எச்சரிக்கை செய்கிறோம்.

"முன்னாள் முதல்வர்கள் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா தீய சக்தியான தி.மு.க.வை ஒழித்து விட வேண்டும் என்று கூறி, அதற்காக எம்.ஜி.ஆர். தனிக்கட்சி தொடங்கினார். ஆனால், தி.மு.க.வையே த.வெ.க. தலைவர் விஜய் ஒழித்து கட்டி விட்டார். இப்படி கூறியிருக்கிறார் ஆர்.எஸ்.எஸ்.ஸின் கைக்கூலி, கங்காணியான நிர்மல் குமார். தி.மு.க.வை ஒழித்துக் கட்டி விட்டாரா ஜோசப் விஜய்? தி.மு.க. கூட்டணி 73 இடங்களில் வெற்றி பெற்றது; அதில் 59 இடங்களில் தி.மு.க. பெற்றது. அதன் கூட்டணிக் கட்சிகளான காங் – 5, வி.சி. 2, இ.கம்யூ – 2, இடது கம்யூ – 2, இந்திய முஸ்லிம் லீக் – 2. (தேமுதிக – 1) எனக் கூட்டணிக் கட்சிகள் 14 இடங்களில் வெற்றி பெற்றன. தேமுதிக வைத்தவிர மற்ற 13 எம்.எல்.ஏக்கள் ஆதரவோடு ஜோசப் விஜய் ஆட்சியில் இருக்கிறார் என்பதை மறந்து பைத்தியக்காரத்தனமாக மந்திரிகள் பேசி வருகிறார்கள். ஆட்சி அமைக்க போதுமான இடங்களைத் தரவில்லை ஜோசப் விஜய். ஆனால், சிறுபான்மை எண்ணிக்கை 107 இடங்கள் மட்டுமே பெற்ற த.வெ.க. ஆட்சி அமைப்பதற்கு திமுகவில் கூட்டணிக் கட்சிகள் தான் உதவி புரிந்திருக்கின்றன. திமுகவின் கூட்டணிக் கட்சியின் தயவு, தாட்சண்ய துணையோடு ஆட்சி நடத்தும் ஜோசப் விஜய் திமுகவை முடித்து விட்டாராம்!...

"உசுப்பேற்றுபவர்கள் 'உம்' என்றும், கடுப்பேற்றுபவர்கள் 'கம்' என்றும் இருந்தால்; வாழ்க்கை 'ஜம்' என்று இருக்கும் எனச் சிறீ சாய்ராம் பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற 'சர்க்கார்' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழாவில் (02–10–18) நடிகராக இருந்த ஜோசப் விஜய் பேசியதை நிலைநாட்டும் விதத்தில்; தற்பொழுது அரசியலில் மெய்ப்பித்துக் காட்டி வருகிறார்.



வ.உ.சி. கல்லூரியில் நடைபெற்ற இந்திய ஹாக்கி போட்டியின் தந்தை மேஜர் தயான் சந்த் பிறந்தநாளையொட்டி ஹாக்கி போட்டியை தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன் துவக்கி வைத்தார். உடன் மாநகர திமுக செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்த சேகரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### ஆணவக் கொலைகள் குறித்து ஆராய

## தி.மு.க. ஆட்சியில்தான் குழு அமைக்கப்பட்டது!

### சட்டப்பேரவையில் கழகக் கொறடா எ.வ வேலு பேச்சு!

சென்னை, ஆக.30-

ஆணவக் கொலைகள் குறித்து ஆராய ஒய்வு பெற்ற நீதிபதி கே.என். பாட்ஷா அவர்கள் தலைமையில் குழு அமைத்தது தி.மு.க. ஆட்சியில் தான் என்று சட்டமன்றத்தில் கழகக் கொறடா எ.வ வேலு பேசினார்.

சட்டமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தின் போது சட்டமன்ற கொறடா எ.வ.வேலு அவர்கள் பேசியதாவது:-

இங்கு சமூக நீதித்துறை அமைச்சர் பேசும்போது ஆணவக் கொலைகள் தொடர்பாக ஒரு கருத்தினைச் சொல்லி இருக்கிறார்.

இந்த அவையிலே அந்தப் பகுதியிலும் புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள் இந்த பகுதியிலும் புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள், அவர்கள் பேசும் பணி நிறைவு பெற்ற நீதியரசர் பாட்ஷா அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டது என்று பேசினார்கள்,

குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் கே.என்.பாட்ஷா அவர்கள் தலைமையில் குழு அமைத்ததே திராவிட மாடல் ஆட்சியில் முதலமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### வடகிழக்குப் பருவமழைக்கு முன் – சென்னையில்

## வெள்ளத் தடுப்புப் பணிகளை போர்க்கால அடிப்படையில் முடிக்க வேண்டும்!

### சட்டப் பேரவையில் – முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தல்!

சென்னை, ஆக.30-

வடகிழக்குப் பருவ மழை தொடங்க உள்ள நிலையில், சென்னையில் மழைநீர் வடிகால் மற்றும் வெள்ளத் தடுப்புப் பணிகளின் தற்போதைய நிலை குறித்து முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர் பாபு சட்டப்பேரவையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:

சென்னையில் 3,014 கிலோ மீட்டர் அளவிற்கு மழைநீர் வடிகால்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த மழைநீர் வடிகால்கள் பருவ மழைக்கு முன்பாக மாநகராட்சியால் முழுமையாகத் தூர்வாரப்படுவது வழக்கம். பருவமழை தொடங்கிய பின்னர் டிசம்பர் மாதத்தில் மீண்டும் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.



குறிப்பாக, சமூக ஆர்வலர்கள் மற்றும் தனியார் வானிலை ஆராய்ச்சியாளர்கள், மாறிவரும் எல்நினோ சூழல் காரணமாக 1997 மற்றும் 2015ஆம் ஆண்டுகளைவிட சென்னையில் அதிக மழைப் பொழிவு ஏற்படக்கூடும் என்று எச்சரித்துள்ளனர்.

எனவே, சென்னையில் உள்ள கால்வாய்கள் மற்றும் முகத்துவாரங்களை முழுமையாகத் தூர்வாருவதுடன், சேதமடைந்த சாலைகளையும் செப்பனிட்டு பாதுகாக்க வேண்டும். இந்தப் பணிகள் அனைத்தும் பருவமழைக்கு முன்பாக போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களுக்கு சுமார் 2,000 கோடி அளவிற்கு இன்னும் தொகை நிலுவையில் இருப்பதாக அறிகிறேன்.

அதேபோன்று, மாநகராட்சியில் மாமன்ற உறுப்பினர்களுக்கான வார்டு மேம்பாட்டு நிதியும் இன்னும் விடுவிக்கப் படவில்லை. இதனைக் கண்டித்து மாமன்ற உறுப்பினர்கள் கருப்பு உடை அணிந்து மாநகராட்சி கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

எனவே, அரசு உடனடியாக போதிய நிதியை வழங்கி, நிலுவையில் உள்ள மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிகள், கால்வாய் தூர்வாரும் பணிகள் மற்றும் சாலை சீரமைப்புப் பணிகள் அனைத்தையும் வடகிழக்குப் பருவமழைக்கு முன்பாக போர்க்கால அடிப்படையில் முடிக்க வேண்டும் என்று பேரவைத் தலைவர் வாயிலாக அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர் பாபு பேசினார்.

### 'முரசொலி' பைண்டர் எம்.ஆர்.பன்னீர்செல்வம் மனைவி

## ப.லட்சுமி அம்மாள் படத் திறப்பு நிகழ்ச்சி!

சென்னை ஆக.30-

முரசொலி அலுவலகத்தில் பைண்டிங் பிரிவில் பணியாற்றும் எம்.ஆர்.பன்னீர்செல்வத்தின் மனைவி ப.லட்சுமி அம்மாள் உடல் நலக் குறைவினால் கடந்த 15.08.2026 அன்று மாலை மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



அம்மையாரின் படத் திறப்பு நிகழ்ச்சி இன்று (30.08.2026 ஞாயிற்றுக் கிழமை) காலை 10 மணி அளவில் நம்பர் 204, ஆண்டியப்பன் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 33 என்ற முகவரியில் நடைபெறுகிறது.



கழகத் தலைவர் "மு.க.ஸ்டாலின் தாத்தாவின் அன்பு பரிசு என்ற தலைப்பில் கோவை மாநகர் மாவட்டம், சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதி, நந்தா நகர் பகுதி கழகத்தின் சார்பில் பகுதி கழக செயலாளர் எஸ்.எம்.சாமி ஏற்பாட்டில் 57 வது வட்ட கழகத்திற்குட்பட்ட மாநகராட்சி ஆரம்ப பள்ளியில் பயிலும் 300 மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கோவை மாநகர் மாவட்ட அவைத்தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர், முனைவர் கணபதி ப.ராஜ்குமார் வழங்கினார். இதில் வட்ட கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் சண்முகம், மாரிமுத்து, பாலகிருஷ்ணன், சிவா, மாமன்ற உறுப்பினர் சாந்தமணி உள்பட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.